**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Research Article*

# The Semiotics of Eyes and Ethics of Life in Thirukkural: An Analytical Evaluation

**Dr. M. Chitrakala***,

*Assistant Professor, Department of Tamil, NGM College, Pollachi.*
*ORCiD: https://orcid.org/0000-0001-9743-9420.*

*Correspondence: chitrababu1996@gmail.com, Tel: +919842250753

**Received**: 26-01-2026; **Revised**: 27-01-2026; **Accepted**: 30-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** In the landscape of Tamil literature, eyes are constructed not merely as visual sensory organs but as the fountainhead of human emotions, symbols of virtue (Aram), and tools of political strategy. Specifically, in the universal code of ethics, the Thirukkural, Thiruvalluvar has utilized the language of the eyes with great subtlety. This article analyzes how eyes are handled both symbolically and through physical manifestations (Meippattiyal) in the sections of 'Kannottam' (Benignity), 'Ottradal' (Espionage), and 'Kamathuppal' (The Canto of Love) within the Thirukkural. Against the backdrop of Sangam literature and with the aid of Tholkappiyar's theories on Meippattiyal, this research extensively reveals the nine emotions (Navarasas) expressed through the eyes and the internal (Akam) and external (Puram) life values they signify. Furthermore, the article explores scientific perspectives on eyes in Siddha medicine and the contemporary vital virtue of eye donation, connecting them with the ethical framework of Valluvar.

**Keywords:** Thirukkural, Kannottam (Benignity), Meippattiyal, Kamathuppal, Language of Eyes, Sangam Literature, Semiotics, Siddha Medicine, Eye Donation.

.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# திருக்குறளில் விழிகளின் குறியீட்டியல் மற்றும் வாழ்வியல் அறம்

**முனைவர் ம. சித்ரகலா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியப் பரப்பில் கண்கள் என்பவை வெறும் காட்சிப் புலனுறுப்பாக மட்டும் அன்றி, மனித உணர்வுகளின் ஊற்றுக்கண்ணாகவும், அறத்தின் அடையாளமாகவும், அரசியலின் கருவியாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, உலகப் பொதுமறையான திருக்குறளில் திருவள்ளுவர் விழிகளின் மொழியை மிக நுட்பமாகப் பயன்படுத்தியுள்ளார். இக்கட்டுரை, திருக்குறளில் இடம்பெறும் 'கண்ணோட்டம்', 'ஒற்றாடல்', 'காமத்துப்பால்' ஆகிய பகுதிகளில் விழிகள் எவ்வாறு குறியீட்டு ரீதியாகவும், மெய்ப்பாட்டு ரீதியாகவும் கையாளப்பட்டுள்ளன என்பதை ஆய்வு செய்கிறது. சங்க இலக்கியங்களின் பின்னணியில், தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளின் துணைகொண்டு, விழிகளின் வழியாக வெளிப்படும் நவரசங்களையும், அவை உணர்த்தும் அக மற்றும் புற வாழ்வியல் விழுமியங்களையும் இவ்ஆய்வு விரிவாகப் புலப்படுத்துகிறது. மேலும், சித்த மருத்துவத்தில் விழிகள் குறித்த அறிவியல் பார்வைகளையும், நவீனக் காலத்தின் இன்றியமையாத அறமாகத் திகழும் கண்தானத்தையும் வள்ளுவத்தின் அறத்தோடு இணைத்து இக்கட்டுரை அணுகுகிறது.

**திறவுச்சொற்கள்**

திருக்குறள், கண்ணோட்டம், மெய்ப்பாட்டியல், காமத்துப்பால், விழிகளின் மொழி, சங்க இலக்கியம், குறியீட்டியல், சித்த மருத்துவம், கண்தானம்.

## 1. முன்னுரை

மனித உடலின் உறுப்புகளுள் ஒளியின் இருப்பிடமாகவும், உள்ளத்தின் வெளிப்பாடாகவும் திகழ்வது கண். உலகைக் காண உதவும் கருவியாக மட்டுமன்றி, உலகிற்கு நம்மை உணர்த்தும் ஊடகமாகவும் இது செயல்படுகிறது. கண்கள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகம் இருண்டதாகவே அமையும் என்பதால், கண்கள் ஒளியின் அடையாளமாகக் கருதப்படுகின்றன. தமிழ் இலக்கிய மரபில், குறிப்பாகச் சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறளில், கண்கள் என்பவை அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றிற்கும் அடிப்படையான செயல்பாடுகளைக் கொண்டுள்ளன.

திருவள்ளுவர் தனது குறட்பாக்களில் கண்களை வெறும் உருவகங்களாக மட்டும் பயன்படுத்தாமல், அவற்றைப் பண்பாட்டின் குறியீடுகளாகவும், வாழ்வின் வழிகாட்டிகளாகவும் மாற்றியுள்ளார். ஒரு

https://doi.org/10.63300/tm09012026

மனிதனின் மனதிலுள்ள மகிழ்ச்சி, கோபம், காமம், காதல், வெறுப்பு ஆகிய அனைத்தும் அவனது விழிகளின் வழியே முதலில் வெளிப்படுகின்றன. இத்தகைய உணர்வுப் பரிமாற்றங்களை வள்ளுவம் எவ்வாறு காட்சிப்படுத்துகிறது என்பதை ஆராய்வதே இவ்ஆய்வேட்டின் முதன்மை நோக்கமாகும்.

## 2. விழிகளின் குறியீட்டியலும் இலக்கியப் பதிவுகளும்

இலக்கியங்களில் கண்களை வர்ணிக்காத புலவர்களே இல்லை எனலாம். கண்களின் அழகையும் அவற்றின் ஆற்றலையும் பாடுவது ஒரு மரபாகவே வளர்ந்துள்ளது.

### 2.1 தெய்விக வர்ணனைகளில் விழிகள்

ஆண்டாள் தனது 'திருப்பாவை'யில் திருமாலை வர்ணிக்கும்போது, "ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் கார்மேனிச் செங்கள் கதிர்மதியம் போல் முகத்தான்" என்று குறிப்பிடுகிறார். இங்கு சூரிய சந்திரர்களைப் போன்ற பிரகாசமான விழிகள் இறைத்தன்மைக்குக் குறியீடாக அமைகின்றன. அதேபோல் 'தமிழ்விடுதூது' மதுரையில் வீற்றிருக்கும் மீனாட்சி அன்னையின் கண்களை, "மைக்கண் கரும்பை மருவில் பிரியாத முக்கண் கனியே முழுமுதலே" என்று போற்றுகிறது.

### 2.2 ஒப்புமைகளும் உருவகங்களும்

சங்க காலந்தொட்டு இன்றுவரை கண்களுக்குப் பல்வேறு உவமைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நீலோற்பல மலர், குவளை மலர், கெண்டை மீன், கயல் விழி எனப் பலவாறு கவிஞர்கள் விழிகளைப் புகழ்கின்றனர். வள்ளுவரும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர் தலைவியின் கண்களைப் பற்றிக் கூறும்போது:

> **"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்**
> **பலர்காணும் பூவொக்கும் என்று" (குறள் 1112)**

என்று குறிப்பிடுகிறார். இங்குப் பூக்கள் பலரால் பார்க்கப்படுவன, ஆனால் தலைவியின் கண்கள் தனித்துவமானவை என்ற நுட்பமான வேறுபாட்டை அவர் உணர்த்துகிறார்.

| **இலக்கியம்** | **கண்களுக்கான உவமை / குறியீடு** | **பொருள்** |
|---|---|---|
| திருக்குறள் | மலர், கூற்றம், பிணை | அழகு, அழிவு, மருட்சி |
| புறநானூறு | வேல், அம்பு | வீரமும் கூர்மையும் |

| இலக்கியம் | கண்களுக்கான உவமை / குறியீடு | பொருள் |
|---|---|---|
| திருப்பாவை | கதிர், மதியம் | ஒளி மற்றும் குளிர்ச்சி |
| நாட்டுப்புறப் பாடல்கள் | கண்மணி, ஒளி | உயிர் மற்றும் பாதுகாப்பு |

### 3. அறவியலில் கண்ணோட்டம்: சமூகப் பண்பாட்டு நோக்கு

திருக்குறளின் 'பொருட்பால்' பகுதியில் இடம்பெற்றுள்ள 'கண்ணோட்டம்' (அதிகாரம் 58) எனும் அதிகாரம், விழிகளை ஒரு சமூக அறமாக மாற்றுகிறது. கண்ணோட்டம் என்பது இரக்கம், அன்பு மற்றும் பிறரது உணர்வுகளை மதித்தல் ஆகியவற்றின் தொகுப்பாகும்.

### 3.1 உலகியலின் அடிப்படை

"கண்ணோட்டம் என்னுங் கழிபெருங்
காரிகை உண்மையான் உண்டிவ் வுலகு" (குறள் 571)

என்ற குறள், இந்த உலகம் இயங்குவதற்குக் காரணமே மனிதர்களிடம் உள்ள கருணை மிகுந்த கண்ணோட்டம் தான் என்று வலியுறுத்துகிறது. இங்கு 'காரிகை' என்பது அழகைக் குறிக்கிறது. உலகிற்குப் பெரும் அழகு கண்ணோட்டம் உடையவர்களால் தான் கிடைக்கிறது. அத்தகைய பண்பு இல்லாதவர்கள் உயிரோடு இருப்பதானது பூமிக்குச் சுமையே தவிர வேறில்லை என்பதை, "கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார் உண்மை நிலக்குப் பொறை" (குறள் 572) என்ற குறள் மூலம் வள்ளுவர் சாடுகிறார்.

### 3.2 விழிகளும் இசையும்: ஓர் ஒப்பீடு

இசையும் பாடலும் எவ்வாறு பொருந்தி வர வேண்டுமோ, அதேபோல் கண்களுக்குக் கண்ணோட்டம் பொருந்த வேண்டும்.

"பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்
கண்ணோட்டம் இல்லாத கண்" (குறள் 573)

என்று வள்ளுவர் வினவுகிறார். பாடலோடு இசையாத பண் எவ்வாறு பயனற்றதோ, அதுபோலவே கருணையோடு இயையாத கண்களும் பயனற்றவை.

கண்ணிற்கு உண்மையான அணிகலன் கண்ணோட்டமே என்பதை, "கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற் புண்ணென் றுணரப் படும்" (குறள் 575) என்று அறுதியிட்டுக்

கூறுகிறார். கண்ணோட்டம் இல்லாத கண்களைப் 'புண்' என்று அவர் அழைப்பது, அறமற்ற பார்வையைக் கடும் சொற்களால் கண்டிப்பதைக் காட்டுகிறது.

### 3.3 நாகரிகமும் கண்ணோட்டமும்

பழகியவர் நஞ்சைக் கொடுத்தாலும் அதைக் கண்ணோட்டம் காரணமாகக் குடித்துவிட்டு அவரோடு நட்பு பாராட்டுவதே உயர்ந்த நாகரிகம் என வள்ளுவர் கூறுகிறார். "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்" (குறள் 580) என்பது இதன் சான்றாகும். இது தனிமனித ஒழுக்கத்தின் உச்சகட்டமாகப் பார்க்கப்படுகிறது.

## 4. அரசியல் பார்வையும் ஒற்றாடலும்

அரசியல் அறத்தில், விழிகள் அறிவு மற்றும் உளவுத்துறையின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. மன்னன் என்பவன் தனது நேரடிப் பார்வையால் மட்டும் நாட்டை ஆள முடியாது.

### 4.1 மன்னனின் இரு கண்கள்

திருவள்ளுவர் ஒற்றர்களையும் (Spies), நூல்களையும் (Knowledge) மன்னனின் இரு கண்களாகக் குறிப்பிடுகிறார்.

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும்
தெற்றுஎன்க மன்னவன் கண்" (குறள் 581)

என்பது மன்னன் எவ்வாறு உலக நிகழ்வுகளைக் காண வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலாகும்.

### 4.2 குறிப்பறிதலும் விழிகளும்

மன்னனுக்குப் பக்கபலமாக இருக்கும் அமைச்சர்கள், பிறரது முகத்தையும் கண்களையும் பார்த்தே அவர்கள் மனதில் உள்ளதை அறியும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

"பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்" (குறள் 709)

ஒருவர் பேசாமலேயே அவரது கண்கள் பகைமையையும் நட்பையும் காட்டிக் கொடுத்துவிடும். இத்திறன் கொண்ட அமைச்சர்களைப் பெற்ற மன்னன் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. 'நுண்ணியர்' என்பவர்கள் அளவுகோல் கொண்டு பொருள்களை அளப்பது போல, கண்களைக் கொண்டே பிறர் கருத்தை அளந்துவிடுவர்.

| அரசியல் உறுப்பு | கண்ணாக உருவகிக்கப்படுவது | காரணம் |
|---|---|---|
| ஒற்றர்கள் | மன்னனின் வெளிக்கண் | மறைவான செய்திகளை அறிய உதவுதல் |
| நூல்கள் | மன்னனின் அறிவுக்கண் | அறநெறிகளை உணர்த்துதல் |
| அமைச்சர்கள் | மன்னனின் குறிப்பறியும் கண் | மாற்றான் கருத்தை முன்கூட்டியே உணர்தல் |

**5. காமத்துப்பால்: விழிகளின் காதல் மொழி**

திருக்குறளின் காமத்துப்பால் பகுதியில், விழிகள் ஒரு தனித்துவமான மொழியாக உருமாறுகின்றன. வாய்மொழியை விடக் கண்மொழியே இங்கு மேலோங்கி நிற்கிறது.

**5.1 இதழ்கள் பேசாததைத் விழிகள் பேசும்**

"கண்ணொடு கண் இணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" (குறள் 1100)

என்ற குறள், இருவரது பார்வைகள் ஒன்றோடொன்று கலந்துவிட்டால் அங்குப் பேச்சுக்கு இடமே இல்லை என்பதை உணர்த்துகிறது. இது 'களவியல்' எனும் களவுக்காலக் காதலின் உச்சகட்ட உணர்வாகும். இதையே பாவேந்தர் பாரதிதாசன், "கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்" என்று விரிவுபடுத்துகிறார்.

**5.2 விழிகளின் முரண்பட்ட செயல்பாடுகள் (Meippattiyal)**

தலைவியின் கண்கள் ஒரே நேரத்தில் நோயையும் (காதல் நோய்), அதற்கான மருந்தையும் கொண்டுள்ளதாகத் தலைவன் வியக்கிறான்.

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்றோய் மருந்து" (குறள் 1091).

ஒரு பார்வை காதலை உண்டாக்குகிறது; அடுத்த பார்வை அந்தத் துயரத்தைப் போக்கும் மருந்தாக அமைகிறது.

மேலும், தலைவி தலைவனைப் பார்க்கும் விதத்தில் ஒரு நுட்பமான குறும்பு ஒளிந்துள்ளதை, "யான் நோக்குங்காலை நலன் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்" (குறள் 1094) என்று வள்ளுவர் படம்பிடிக்கிறார். தலைவன் பார்க்கும்போது தலைவி பார்வையை விலக்கிக் கொள்கிறாள்; அவன் பார்க்காதபோது அவள் அவனைப் பார்த்துப் புன்னகைக்கிறாள். இது தொல்காப்பியர் குறிப்பிடும் 'நாணம்', 'மடம்' போன்ற மெய்ப்பாடுகளின் வெளிப்பாடாகும்.

https://doi.org/10.63300/tm09012026

### 5.3 கண் விதுப்பழிதல் (Suffering of the Eyes)

பிரிவுத் துயரால் தலைவியின் கண்கள் படும்பாட்டை 'கண் விதுப்பழிதல்' எனும் அதிகாரத்தில் வள்ளுவர் விரிவாகக் கூறுகிறார். தலைவனைக் காண வேண்டும் என்ற துடிப்பு கண்களுக்கு உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்
சென்ற நாளொற்றித் தேய்ந்த விடல்" (குறள் 1286)

தலைவன் வரும் வழியைப் பார்த்துப் பார்த்துத் தலைவியின் கண்கள் ஒளியிழந்து போயின. மேலும், இந்தக் காதல் நோய் வரக் காரணமே இந்தக் கண்கள் தான், ஆனால் இப்போது அவை அழுவதில் என்ன பயன் என்று தலைவி வினவுகிறாள் (குறள் 1171). தன் ரகசியக் காதலை ஊர் அறியப் பறைசாற்றுவதும் இந்தக் கண்கள் தான் என்று அவள் வருந்துகிறாள்.

"மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து" (குறள் 1180).

## 6. அறிவியல் நோக்கும் விழிகளும்: ஒரு தத்துவப் பார்வை

பண்டைய தமிழர்கள் விழிகள் மற்றும் ஒளி குறித்த ஆழமான அறிவியல் அறிவைப் பெற்றிருந்தனர். சங்க இலக்கியங்களில் இதற்கான சான்றுகள் பல உள்ளன.

### 6.1 ஒளியியல் அறிவும் கபிலரும்

கபிலர் தனது பாடல்களில் ஒரு சிறிய பனித்துளி எவ்வாறு ஒரு பெரிய பனைமரத்தைத் தன்னுள் பிரதிபலிக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறார். இது நவீன ஒளியியல் (Optics) மற்றும் வில்லைகளின் (Lenses) செயல்பாட்டை அன்றே தமிழர்கள் அறிந்திருந்ததைக் காட்டுகிறது. கலிலியோ தொலைநோக்கியைக் கண்டுபிடிப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, 'சிறிய உருவத்தைப் பெரிதாகக் காட்டுதல்' எனும் கோட்பாட்டைத் தமிழ்ப் புலவர்கள் இலக்கியங்களில் கையாண்டுள்ளனர்.

### 6.2 ராமன் விளைவும் சங்க இலக்கியமும்

சர் சி.வி. ராமன் கண்டறிந்த 'ராமன் விளைவு' (Raman Effect) என்பது ஒளியின் சிதறல் மற்றும் பொருள்களின் நிற மாற்றம் குறித்தது. புறநானூற்றில் கதிரவனின் கதிர்கள் 'பல்கதிர்' (பல்வேறு நிறங்களை உடைய கதிர்கள்) என்று குறிப்பிடப்படுவது, தமிழர்கள் ஒளியின் பன்முகத் தன்மையை

உணர்ந்திருந்ததற்குச் சான்றாகும். விழிகள் பார்க்கும் கோணத்தைப் பொறுத்தே ஒரு பொருளின் நிறமும் ஒளியும் மாறுபடுகின்றன என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

### 6.3 சித்த மருத்துவத்தில் கண் மருத்துவ முறைகள்

அகத்தியர் நயன விதி போன்ற சித்த மருத்துவ நூல்கள் கண் நோய்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றன.

| **மருத்துவ அம்சம்** | **சித்த மருத்துவத் தகவல்** | **நவீன ஒப்புமை** |
|---|---|---|
| நோய்களின் எண்ணிக்கை | 96 வகையான கண் நோய்கள் | கண் நோய்களின் வகைப்பாடு |
| அறுவை சிகிச்சை கருவிகள் | 26 வகையான கருவிகள் | நவீன கண் அறுவை சிகிச்சை உபகரணங்கள் |
| அறுவை முறைகள் | தைத்தல், கீறுதல், உரித்தல் | Cataract Surgery (புரை அறுவை சிகிச்சை) |

கண்கள் என்பவை 'காண்' எனும் வினையிலிருந்து உருவானவை என்பதும், சித்தர்கள் ஒளியியல் மற்றும் உடலியல் அடிப்படையில் கண்களை மிகத் துல்லியமாக ஆராய்ந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 7. திருக்குறளில் விழிகளின் மெய்ப்பாட்டியல் பகுப்பாய்வு

மெய்ப்பாடு என்பது மனதின் உணர்வுகள் உடலில் வெளிப்படுவதாகும். தொல்காப்பியர் மெய்ப்பாட்டை எண்வகைப்படுத்துகிறார் (நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை). இந்த எட்டும் கண்களின் வழியாகவே முழுமையாக வெளிப்படுகின்றன.

### 7.1 உவகையும் உவகை நோக்கும்

தலைவனைக் கண்டதும் தலைவியின் கண்களில் ஏற்படும் மகிழ்ச்சி, அவள் அடைந்த 'பசலை' நோயைத் தீர்க்கும் மருந்தாகிறது.

"கண்ணாரக் கண்டது தன் பசலை தீர்ந்ததாக" (குறுந்தொகைப் பாடல் எண் - 27)

கண்களின் வழியே உடல் நலம் பெறும் அதிசயத்தைக் காட்டுகிறது.

https://doi.org/10.63300/tm09012026

### 7.2 வெகுளியும் சிவப்பு நோக்கும்

பகைமையைக் காட்டும் கண்கள் சினத்தால் சிவக்கின்றன. தேவநேயப் பாவாணர் தனது உரையில், நவரசங்களில் ஒன்றான சினம் கண்களில் சிவப்பால் அறியப்படும் என்று குறிப்பிடுகிறார். இதேபோல், ஒரு மன்னனின் 'வெறுத்த நோக்கும்', 'உவந்த நோக்கும்' அமைச்சர்களால் குறிப்பால் அறியப்பட வேண்டும்.

### 7.3 மருட்கையும் பிணை நோக்கும்

தலைவியின் பார்வைக்கு மூன்று தன்மைகள் இருப்பதாகத் தலைவன் கூறுகிறான்:

> "கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
> நோக்கம் இம் மூன்றும் உடைத்து".

இதில் 'பிணை' என்பது பெண் மானைக் குறிக்கும். மானின் மருண்ட பார்வையைப் போன்ற அழகு தலைவியின் கண்களில் இருப்பதாக வள்ளுவர் நயம்படக் கூறுகிறார்.

## 8. சமூகக் குறியீடாகப் 'பார்வை' (The Social Gaze)

சமூகத்தில் விழிகளின் பார்வை என்பது வெறும் தனிமனிதச் செயல்பாடு மட்டுமல்ல, அது ஒரு அதிகாரமாகவும், நம்பிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

### 8.1 திருஷ்டி (Evil Eye) குறித்த நம்பிக்கைகள்

தமிழ் பண்பாட்டில் 'கண்ணேறு' அல்லது 'திருஷ்டி' என்பது ஒரு முக்கியமான நம்பிக்கையாகும். பொறாமை கொண்டவர்களின் பார்வை ஒருவரது வளர்ச்சியைப் பாதிக்கும் என்று நம்பப்படுகிறது. இதைப் போக்க 'திருஷ்டி பொம்மை'கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பொம்மைகளின் நோக்கம் என்னவென்றால், பார்ப்பவரின் முதல் பார்வையைத் திசைதிருப்பி, அதன் தீவிரத்தைக் குறைப்பதே ஆகும். இது குறியீட்டியல் அடிப்படையில் ஒரு எதிர்மறைப் பார்வையைத் தடுக்கும் ஒரு தற்காப்பு முறையாகும்.

### 8.2 கண்தானம்: வள்ளுவத்தின் நவீன வடிவம்

வள்ளுவர் "கண்ணோட்டம்" என்பதைப் பிறர் துன்பம் கண்டு உருகுதல் என்று கூறினார். இன்று அந்த அறத்தின் உச்சகட்டமாக 'கண்தானம்' விளங்குகிறது.

> "கண் தானம் செய்வதன் மூலம் ஒருவரது இருண்ட உலகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வர முடியும்..."

https://doi.org/10.63300/tm09012026

மனிதன் இறந்த பின்பும் அவனது விழிகள் இவ்வுலகைப் பார்க்க முடியும் என்பது அறிவியலின் வரம். வள்ளுவர் போற்றிய 'கண் போன்ற உறவினர்' (கண் அன்ன கேளீர்) என்ற உயரிய மதிப்பை, ஒருவருக்குக் கண் ஒளி கொடுப்பதன் மூலம் நாம் அடைய முடியும். "நாட்டு நலனைக் கண்போல காப்போம்" என்ற முழக்கம், விழிகளின் பாதுகாப்பையும் சமூகத்தின் பாதுகாப்பையும் ஒன்றாக இணைக்கிறது.

## 9. முடிவுகளும் பகுப்பாய்வும்

திருக்குறள் மற்றும் சங்க இலக்கியங்களில் விழிகள் குறித்த ஆய்வின் மூலம் பின்வரும் முடிவுகளை எட்ட முடிகிறது:

1. **உணர்வுகளின் கண்ணாடி**: கண்கள் என்பவை மனதின் எண்ணங்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தும் கருவிகளாகச் செயல்படுகின்றன. அகத்தின் அழகு முகத்தில் தெரிவதற்குக் கண்களே முதன்மைக் காரணம்.

2. **அறத்தின் வெளிப்பாடு**: 'கண்ணோட்டம்' எனும் அறம், மனிதகுல நாகரிகத்தின் அடிப்படையாகத் திகழ்கிறது. கண்ணோட்டம் இல்லாதவர்கள் உயிரோடு இருப்பினும் நிலத்திற்குச் சுமையாகவே கருதப்படுகிறார்கள்.

3. **அரசியல் கருவி**: ஒரு மன்னனுக்கு ஒற்றர்களும், அறிவு நூல்களும் இரு கண்களாக அமைந்து, காலத்தையும் கருத்தையும் முன்கூட்டியே அறிய உதவுகின்றன.

4. **காதல் மொழி**: சொற்களால் சொல்ல முடியாத நுட்பமான உணர்வுகளைக் கண்கள் பேசுகின்றன. குறிப்பாக, காதலில் பார்வைகள் இணையும்போது மொழிகள் அவசியமற்றவை ஆகின்றன.

5. **அறிவியல் முதிர்ச்சி**: பண்டைய தமிழர்கள் ஒளியியல், நிறப்பிரிகை மற்றும் கண் மருத்துவத்தில் (Siddha Ophthalmology) நவீன அறிவியலுக்கு இணையான அறிவைப் பெற்றிருந்தனர்.

திருவள்ளுவர் கண்களை வெறும் உடல் உறுப்பாகப் பார்க்காமல், ஒரு மனிதனின் பண்பு, அறிவு, மற்றும் அன்பின் ஒட்டுமொத்த அடையாளமாகப் பார்த்துள்ளார். "திருக்குறள் பேசும் கண்கள்" என்பது ஒரு கவித்துவமான தலைப்பு மட்டுமல்ல, அது ஒரு ஆழமான வாழ்வியல் தத்துவமாகும். வாழ்வின் இன்ப துன்பங்களை, அரசியலின் சூட்சுமங்களை, மற்றும் அறத்தின் மேன்மைகளை உணர்த்தும் ஒரு சிறந்த குறியீடாக 'கண்' வள்ளுவத்தில் மிளிர்கிறது.

**துணைநூற் பட்டியல்**


1. அத்துவித வெண்பா உண்மை விளக்கம். கழக வெளியீடு, 1975.
2. அருணாசலம், மு. தமிழ் இலக்கிய வரலாறு. காந்தி வித்யாலயம், 1975.
3. திருவள்ளுவர். திருக்குறள்: பரிமேலழகர் உரை. சாரதா பதிப்பகம், 2014.
4. தொல்காப்பியர். தொல்காப்பியம்: பொருளதிகாரம். கழக வெளியீடு, 2004.
5. வரதராசனார், மு. திருக்குறள் தெளிவுரை. பாரி நிலையம், 2015.
6. Jeyavenkatesh, J., et al. "A Comparative Study and Review of Siddha Ophthalmology from the Classical Siddha Literature Agatthiar Nayana Vidhi-500." *Asian Journal of Research and Reports in Ophthalmology*, vol. 5, no. 1, 2022, pp. 19-35.
7. Maharajan, S. *Tiruvalluvar*. Sahitya Akademi, 1979.
8. Muthukumar, Vangal N. *Poetics of Place in Early Tamil Literature*. PhD Dissertation, University of California, Berkeley, 2010.
9. "Scientific Knowledge of Ancient Tamils in Sangam Literature." *ResearchGate*, 2024.


https://doi.org/10.63300/tm09012026